Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 08 உ வியாழக்கிழமை (25 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 05 ஓசை 240

## சூரனின் தலை தப்பியது

நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற இந்த குண்டு வீச்சின்போது சாவகச்சேரி முருகமூர்த்தி கோயிலிலிருந்து திக் விஜயத்திற்காக நகர்வலம் வந்த சூரன் கண்டிவீதியில் சென்று கொண்டிருந்த போது பொம்மரின் நோட்டத்திற்கு உள்ளானார். அதைத்தொடர்ந்து சூரனின்மீது குண்டுவீச்சு இடம்பெற்றது. ஆனால் இக்குண்டு அருகிலிருந்த ஒருவீட்டின்மீது வீழ்ந்துஅந்த வீடு சேதமுற்றது. சூரனுடன் நின்ற சிறுவர்கள் பாய்ந்து ஓடித்தப்பிக்கொண்டனர். சூரனும் எதுவித சேதத்திற்கும் உட்படாது தப்பிக் கொண்டார்.

# தென்மராட்சியில் குண்டுவீச்சு;

# ஒருவர் பலி; 20பேர் படுகாயம் 25கடைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, மட்டுவில், புத்தூர்ச் சந்தி ஆகிய பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்றுக் காலை பத்து மணியளவில் நடத்திய குண்டு வீச்சில் ஒருவர் தலை சிதறி மரணமானார். இருபது பேருக்குமேல் படுகாயமடைந்தனர். இருபத்தைந்திற்கு மேற்பட்ட கடைகளும், பல வீடுகளும் சேதமடைந்தன.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில்நேற்றுக்காலை பத்துமணியளவில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் அகோரக் குண்டு வீச்சை நடத்தின. இத் தாக்குதலில் ஒருவர் தலை சிதறி துடிதுடித்து உயிரிழந்தார். சந்தை உட்பட சுமார் இருபத்தைந்து கடைக் கட்டடங்கள் நாசமாயின. பதினெட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை பத்துமணியளவில் சாவகச்சேரி வான் பகுதியில் பிரவேசித்த மூன்று குண்டுவீச்சுவிமானங்கள் மாறி மாறிக் குண்டுகளை வீசின.

இந்தக் குண்டு வீச்சினால் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இருந்த அத்தனை வர்த்தக நிலையங்களும் சேதமாயின. இதில் ஜனதா ஹொட்டல், சிவகுரு என்பவருக்குச்சொந்தமான சயிக்கிள் திருத்துமிடம், அட்லஸ் மருந்துச்சாலை, மகேஸ்வரன் மருந்துச்சாலை, மில்ட்லண்ட் வீடியோ, சுகுமார் என்பவருக்குச் சொந்தமான சயிக்கிள் திருத்துமிடம்-

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் இறந்தவர் அடையாளம் தெரியவில்லை

(சாவகச்சேரி)

சிறிலங்கா குண்டுவீச்சுவிமானங்களின் தாக்குதலில் நேற்று சாவகச்சேரி சந்தையில் ஒருவர் உயிரிழந்தார். இவரின் தலை சிதறியதால் அடையாளம் எதுவும் பெற்றுக்

### 18 பேர் படுகாயம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாயில் அரிசி ஆலை உட்பட பலவீடுகள்சேதம்; பலர்படுகாயம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாயில் சிறிலங்கா விமானப்படை பொம்மர் விமானங்கள் குடியிருப்புக்கள் மீது பலத்தகுண்டுத்தாக்குதல் நடாத்தியதில் பலர் காயமடைந்துள்ளதுடன் பல கட்டடங்களும் சேதமடைந்தன.

நேற்று நண்பகல் இப்பகுதிக்கு வந்த இரண்டுபொம்மர் விமானங்கள் சண்டிலிப்பாய்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இறுபிட்டிப் பகுதியில் சடலம், கட்டுமரம் கரை ஒதுங்கின

(புங்குடுதீவு)

இருபத்திரெண்டாம் திகதி திங்கட்கிழமை புங்குடுதீவு இறுபிட்டிப் பகுதி கடற்கரையில் ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. நீலரன்னிங் சோட்ஸ்சுடன் மட்டும் கரை ஒதுங்கியுள்ள இச்சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதுடன் முகம் அடையாளம் தெரியாதவாறு சிதைந்துள்ளது. இதே வேளை இதற்கு முன்தினம் 21ஆம் திகதி இதே பகுதியில் எழுவைதீவைச் சேர்ந்த சூசை தருமராசாஎன்றபெயருடைய அடையாள அட்டை, ஒரு சேட், துவாய் என்பவற்றுடன் கட்டுமரம் ஒன்று கரைஒதுங்கி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (22)

## ஆனையிறவில் 2 படை பலி

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த இரு படையினர் புலிகளின் தாக்குதலால் பலியாகியுள்ளனர்.

நேற்றைய தினம் ஆனையிறவு முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவப் படையினர் இருவர் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சினைப்பர்த் தாக்குதலில் பலியாகியுள்ளனர். (மு)

## மட்டக்களப்பில் ஒரு சிப்பாய் பலி இரு பொலிஸார் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் காவல் கடமையில் இருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டார்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை நகரில் ரோந்து சென்ற பொலிஸார்மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியதில் இரு பொலிஸார் படுகாயமடைந்தனர். (சு)

## மாவிட்டபுரத்தில் நேற்றும் புலிகள் - ராணுவம் மோதல்

(தெல்லிப்பழை)

நேற்று மாலை 5.30 மணியளவில் மாவிட்டபுரம் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரின் ஒரு பிரிவினர் தெற்குப்புறமாக தெல்லிப்பழைப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றபோது அவ் அணியினர் மீது விடுதலைப் புலிகள் கடுந் தாக்குதல்களை மேற்கொண்டனர். இராணுவத்தினர் இரண்டு அங்குல மோட்டார் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். பதிலுக்கு புலிகள் 'அருள் 89' தாக்குதலை மேற் கொண்டனர். தொடர்ந்து முப்பது நிமிடங்கள் வரை இம்மோதல் இடம்பெற்றது. இதனைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பொருளாதார சமூகம் சிறிலங்கா அரசு மீது கண்டனம்

(லண்டன்)

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தைச் (E.E C) சேர்ந்த நாடுகள் இலங்கைத்தீவில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்காக சிறிலங்கா அரசை வன்மையாகக் கண்டித்துள்ளன. இராணுவத்தினருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமையும், பாதுகாப்புச் செலவினங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதனையும் சுட்டிக்காட்டியுள்ள ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகநாடுகள் அரசாங்கத்தின் தவறான போக்கினை கண்டித்துள்ளன. மேலும் விமானக்குண்டுவீச்சு, நீண்டதூர ஷெல் வீச்சுப் போன்றவற்றால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதையும், அவைகவனத்திற்கு எடுத்துக் கண்டனம் தெரிவித்துள்ளன.

பாரிசில் இடம்பெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதமரும், நிதியமைச்சருமான டி. பி. விஜயதுங்கா சென்றிருக்கும் இவ்வேளையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் இரண்டாவது முயற்சியும் முறியடிப்பு

(தெல்லிப்பழை)

நேற்று மூன்தினம் இரவு 11மணியளவில் வாகனங்கள் சகிதம் காங்கேசன் துறை திஸ்ஸவிகாரை முகாமிலிருந்து மேற்குப்பகுதியூடாக வெளியேறி கீரிமலைப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து இராணுவத்தினர்முகாம்திரும்பினர்.

இது அன்றிரவு இராணுவத்தினர் மேற்கொண்ட இரண்டாவது முயற்சியாகும். இதில் இராணுவத்தினருக்கு பலத்த சேதமேற்பட்டதாயினும் சேத விபரம் தெளிவாகத் தெரியவரவில்லை. அதேவேளை இப்பகுதியில் கடந்த 48மணி நேரத்தில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டதாகவும், 16 பேர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## வாகரையில் புலிகள் தாக்குதல் 4 இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வாகரையில் இருந்து புகையிரதப் பாதை வழியாக இராணுவ அணி ஒன்று ரோந்து சென்ற போது விடுதலைப் புலிகள் இவர்களை வழிமறித்து கடும் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலில் இராணுவதரப்பில் நான்குபேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமுற்றனர். (க)

## 2 ஊர்காவற்படை உட்பட பத்துச் சிங்களவர் மரணம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் இருஊர்காவற்படையினர் உட்பட பத்துப்பேர் உயிரிழந்திருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மன்னார் மாவட்டத்தின் எல்லையோரக் கிராமமான தந்திரமலைப் பகுதியிலேயே இத் தாக்குதல் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## 6 படை பலி 24பேர் காயம்

(கொழும்பு)

கடந்த 48 மணிநேரத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில் உயரதிகாரி ஒருவர் உட்பட ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், இருபத்தி நான்கு இராணுவத்தினர் படுகாயமுற்றதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டிஏஜென்சிச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு இல்லாத வேளையில் பணக் கொடுக்கல் வாங்கல்

(அலுவலக நிருபர்)

ஊரடங்கு இல்லாத நாட்களில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் மேற்றரக் கிளையில் வழமையான பணக் கொடுக்கல் வாங்கல்கள் காலை ஒன்பது மணியில் இருந்து பத்து மணிவரை நடைபெறும் என இலங்கை வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வங்கியினால் சகல காசோலைகளும், வவுச்சர்களும் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் பணக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வங்கியில் வரும் பணத்தைப் பொறுத்தே கொடுப்பனவு தீர்மானிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் கப்பலில் வருவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்
### [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1510)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பரன வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B/1509)

### கிளீன்கட் போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை உடனடியாக பெற்றுக்கொள்ளவும், அடையாள அட்டைகளுக்கு கவரிட்டு கொள்வதற்கும் கிளீன் கட் 37 சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (யாழ். இந்து மகளிர் கல்லூரிச்சந்திக்கு அருகாமையில்)

(R/754)

### இடமாற்றம்

அம்பிகாபதி பென்சி கூட்ஸ் 66, பெரியகடை, யாழ்ப்பாணம். மேற்படி விலாசத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனத்தைவாடிக்கையாளரின் பாதுகாப்பு கருதி 54, அம்மன் றோட், நல்லூரிற்கு (வீரமாகாளி அம்மன் கோயில் அருகாமை) மாற்றியுள்ளோம் என்பதை மீண்டும் அறியத் தருகின்றோம்.

(R/757)

### ரதி வோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறு கால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(B-1459)

## முதலுதவி நிலையம்

அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள (நீர்வேலி கிராமிய அபிவிருத்தி சங்க மண்டபத்தில்) மக்களுக்கு காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணிவரையும் முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்படும் என்பதை கோப்பாய் செஞ். ஜோன்ஸ் அன்புலன்ஸ்படை பகுதி அத்தியட்சகர் சோ.சத்தியேஸ்வரன் அறியத்தருகின்றார்.

## உலர் உணவு விநியோகம்

(நல்லூர்)

மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, கட்டுவன் பகுதிகளில் நடைபெற்ற இராணுவ அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகம், இளங்கதிர் சனசமூக நிலைய மாதர் சங்கத்தினரால் இப்பகுதி மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு 22-10-90 அன்று வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் தற்சமயம் கோப்பாய் தெற்கு செல்லத்துரை வீதியில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது,

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால்

## விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக வீடொன்றைக் குத்தகைக்கு பெறுதல்

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு வீடொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகின்றது. குத்தகைக்குக் கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி வளாகத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. தளபரப்பு 150 சதுர மீற்றர்களுக்குக் குறைவாக இருத்தலாகாது.
3. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்கும் இடவசதி, பூந்தோட்ட இடவசதி உடையனவாய் இருத்தல் வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின்போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக் கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1990. 11. 09 ஆம் தேதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுபபிவைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வீட்டைக் குத்தகைக்கு விடல்'' என எழுதப்படல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
23. 10. 1990

(B. 1526)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
26 - 08 - 1963



இறப்பு:
25 - 10 - 1985

## நடேசு இராசேந்திரன் (லலித்)
### லோறன்ஸ், லலித், ஜீவன், சபா

*கொலைவாளினை எடடா மிடு*
*கொடியோர் செயல் அறவே*
*குகைவாழ் ஒரு புலியே*
*குலமேவிய தமிழா!*

இந்த மண்ணிலே, ஆண்ட நம் தமிழினம் அடக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டு அநாதையாக்கப்பட்டபோது தமிழ் ஈழம் ஒன்றுதான் தமிழரின் பாதுகாப்பு அரண் என்று விடுதலைப்புலிகள் சிங்கள இனவெறி அரசோடு ஆயுதம் ஏந்திப்போர் புரிந்தார்கள்-அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் அடித்து நொருக்கப்பட்டன. சாத்வீகம் பேசிய தமிழர் விடுதலை உணர்வால் வீரவேங்கைகள் ஆகினர் - அன்றுதான் வீரவேங்கைகள் விடுதலைப் புலிகள் தம்பிகள் லோறன்ஸ், லலித், ஜீவன், சபா தமிழீழ மண்ணுக்காய் களத்திலேகுருதிசிந்தி வீரமரணம் அடைந்தார்கள், எந்த இலட்சியத்துக்காக இந்த மண்ணிலே மறைந்தார்களோ அந்த இலட்சிய பூமி விரைவில் கிடைக்கும். தம்பிகளின் ஆத்மா சாந்தியடையும், சாந்தி வேண்டி பிராத்திக்கின்றோம்.

''தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்''

'பூரண இல்லம்'
முள்ளியவளை.

- லலித் குடும்பத்தினர்


(B/1517)

## 31ஆம் நாள் இதய அஞ்சலி

''வரலாறு அன்று மனிதனே வரலாற்றை உருவாக்குகிறான்''

25 — 10 — 1990

தாயின் மடியில்
25 — 08 — 1973



தமிழீழ மண்ணில்
25 — 09 — 1990

## சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன்
### (தவக்குமார்)

*''அன்பு மகனே! ஆருயிர்த் தம்பியே!*
*வீரவேங்கையே ஜனார்த்தனா!*
*உன்னை எப்படி மறப்பது...?*
*இந்த இளம் வயதினில்*
*இனத்தின் விடுதலையே இலட்சியமாகக்கொண்டே*
*இன்னுயிரைக் களத்தினிலே ஈந்தவனே!*
*பாயும் புலியே! தவக்குமாரா!*
*பாவற்குளத்தில் புறப்பட்ட*
*சிங்கள இராணுவத்துடன்*
*நேரடி மோதலில் நிமிர்ந்தாய்!*
*நிலைசாய்ந்து கிடந்த எதிரியின் ஆயுதத்தை*
*எடுத்தபோது நெஞ்சினில் குண்டினை ஏந்தி*
*வீழ்ந்தாய் — வேங்கைகள் வீழ்வதில்லை!*
*தவக்குமாராய் மீண்டும் தமிழீழத்தில்*
*எழுவாய்...! மலரும் சுகந்தத்தில்*
*உன் வரலாறு நனவாகப் பரிமளிக்கும்!*

இவருடன் வீரமரணமடைந்த இரு போராளிகளுக்கும் எங்கள் இதய அஞ்சலியை அர்ப்பணிக்கின்றோம்.

அன்பு அம்மா, அப்பா, அண்ணா,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(B-1525)

## சனசமூக நிலையங்களின் புனரமைப்பு - கலந்துரையாடல்

இடம் - கைலாசபதி அரங்கு,
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

காலம்- 26. 10. 90. வெள்ளிக்கிழமை
காலை 10. 00 மணி

**அழைக்கப்படுவோர் -**

சகல சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், சனசமூக நிலையங்களின் சமாஜ,சம்மேளன அங்கத்தவர்கள், பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், உபஅலுவலகப் பொறுப்பதிகாரிகள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

இதில் பங்குபற்றாத சனசமூக நிலையங்கள், சம்மேளனம், சமாஜங்கள் இயங்கவில்லையெனக் கருதப்பட்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சம்பந்தப்பட்டோர் கவனத்திற் கொள்ளவும்;

சு. டிவகலாலா,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

(B-1524)

## மாவீரர் தின மரம்நாட்டு விழா

(புங்குடுதீவு)

அடுத்த மாதம் இருபத்தேழாம் திகதி மாவீரர் தினத்தையொட்டி புங்குடுதீவு கிழக்குதேவாலயா நாடக மன்றத்தினர் விடுதலைப் போராட்டத்தில் வீரமரணமடைந்த வேங்கைகளின் நினைவாக மரம் நாட்டுவிழா ஒன்றை நடாத்த திட்டமிட்டு உள்ளனர்.

அண்மையில் நடந்த இம் மன்றத்தின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றின் படி மேற்படி விழா கொண்டாடப்பட இருப்பதாகவும், இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மன்றத்தின் நாடகத் தயாரிப்பு பிரிவுப் பொறுப்பாளர் 'ஆலடி' காந்தன் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

(22)

## சிந்தனைக்கு

அரசியல் ஞானி, சந்தர்ப்பத்தை உருவாக்குவார்: சந்தர்ப்பம் அரசியல்வாதியை உருவாக்கும்.

— ஜார்ஜ் எஸ். ஹில்லர்ட்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 25-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# கேள்விக்குள்ளாகியிருப்பது தலைமையா? கொள்கையா?

இந்தியாவில் பிரதமர் வி. பி. சிங்கின் தேசிய முன்னணி சிறுபான்மை அரசாங்கம் இன்று பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. பாரதிய ஜனதாக் கட்சி மத்திய அரசாங்கத்திற்கு வழங்கிவந்த ஆதரவை விலக்கிக் கொண்டமையே இந்த நெருக்கடி நிலைக்குக் காரணமாகும்.

ஆனால் இந்த நெருக்கடி நிலைமை எதிர்பாராத தொன்றல்ல. தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெறாத தேசிய முன்னணிக் கூட்டணி கடந்த வருட இறுதியில் ஆட்சிக்கு வந்தபோதே இப்பிரச்சினை கருக்கட்டியிருந்தது. எதிரும் புதிருமான கொள்கைகளையுடைய தீவிர வலது சாரிக் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியையும், இடது சாரி மாக்சிய கம்யூனிஸ்ட் கட்சிகளையும் துணைகொண்டே சிறுபான்மை தேசிய முன்னணி ஆட்சி அமைத்தது. மேலும் தேசிய முன்னணிக் கூட்டில் பிரதான கட்சியாக விளங்கிய ஜனதா தளக்கட்சியும் பல்வேறு உள் முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. ஒருபுறம் தேவிலால், மறுபுறம் சந்திரசேகர், இன்னுமொருபுறம் அருண்நேரு போன்ற பல அணிகளைக் கொண்டதாக ஜனதா தளம் பிளவுண்டிருந்தது.

இவ்வாறான பலவீன நிலையில் ஆட்சிக்கு வந்த வி. பி. சிங் இந்தியாவில் புரையோடிப் போயிருந்த அடிப்படைப் பிரச்சினைக்கும் கடந்த கால ஆட்சியாளர்களால் தோற்றுவிக்கப்பட்டிருந்த பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

பிரதமர் வி. பி. சிங் பதவிக்கு வரும் போதே ராம ஜென்ம பூமி - பாபர் மசூதிப் பிரச்சினை நீறு பூத்த நெருப்பாக இருந்தாலும் பஞ்சாப், காஷ்மீர்ப் பிரச்சினைகளே எரியும் பிரச்சினைகளாக இருந்தன. அத்தோடு தேசிய முன்னணிக் கூட்டணித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வைத்த கொள்கைகள் சிலவற்றை நடைமுறைப்படுத்த முற்பட்டபோது அரசிற்கு மேலும் பிரச்சினைகள் தோற்றம் பெற்றன. இந்நிலையில் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆட்சியாளருக்கே நெருக்கடியைக் கொடுத்தன.

தேசிய முன்னணி அரசாங்கத்தின் மண்டல் கமிசன் தீர்மானங்களை அமுலாக்கும் திட்டம் உயர்சாதி இந்துக்களிடம் இருந்து பலமான எதிர்ப்பைப் பெற்றது. இந்த மண்டல் கமிசன் அமுலாக்கம் தேசிய முன்னணி அரசாங்கத்திற்குள்ளேயே கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவித்தது.

ஆனால் இவ்விடயத்தில் தேசிய முன்னணி அரசாங்கத்தை எவரும் வெளிப்படையாக எதிர்ப்பதற்குத் துணியவில்லை. இந்துக்களின் சனத்தொகையில் 50 வீதமளவில் உள்ள 'தாழ்த்தப்பட்ட மக்களின்' வாக்குரிமை அவர்களை அவ்வாறு செயற்படுவதைத் தடுத்தது.

இதனால் தீவிர வலதுசாரிப் போக்குடைய பாரதிய ஜனதாக் கட்சி வேறு ஒரு வழியில் அரசிற்கான நெருக்கடியைத் தோற்றுவித்தது. ராம ஜென்ம பூமி - பாபர் மசூதிப் பிரச்சினையை தேசிய முன்னணி அரசாங்கம் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விட்டுள்ள போதிலும் பாரதிய ஜனதாக் கட்சி ராமர் கோயில் கட்டுவதை தாமதிக்கத் தயாராகவில்லை.

மண்டல் கமிஷன் தீர்மான அமுலாக்கம், ராம ஜென்ம பூமி பிரச்சினைகள் சிறுபான்மை அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நேரடியாக பாரதிய ஜனதாவும், மறைமுகமாக இந்திரா காங்கிரஸ் கட்சியும் செயற்பட்டாலும் எதிர்காலத்தில் இந்திய அரசியலிலும் இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பவற்றிற்கும் சவால்விடும் பிரச்சினைகளாக இவ்விரு பிரச்சினைகளும் உள்ளன.

இன்று ராம ஜென்ம பூமி – பாபர் மசூதி பிரச்சினை எரியும் பிரச்சினையாக இருந்த பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளைப் பின் தள்ளிவிட்டது எனலாம். அதாவது இப் பிராந்தியப் பிரச்சினைகளை இரு பெரும் தேசிய பிரச்சினைகள் பின்தள்ளிவிட்டன.

இதனால் அடுத்துவரும் எந்த ஒரு மத்திய அரசாங்கமும் இச் சுமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஆட்சி நடத்தமுடியாது. இவ்விரு பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசியல் ஆதாயமும், கட்சி ஆதாயமும் தேடாத இந்தியத் தேசிய தலைவர்கள் தேவை. அவர்கள் இன்று இந்தியாவில் உள்ளனரா?

# திருப்பு முனையில் இந்தியா

"நாங்கள் இப்பொழுது திருப்பு முனையான ஒரு கால கட்டத்தில் நிற்கின்றோம்"

—வி. பி. சிங்

இந்தியப் பிரதமரின் இக் கூற்று நுணுக்கமாகப் பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

சீன-இந்திய யுத்தத்தினால் ஏற்பட்ட திருப்பத்தைவிட இந்திய - ஈழ யுத்தத்தினால் இந்திய அரசியலில் ஏற்பட்ட திருப்பம் பெரிதானதென இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு கட்டுரை எங்கள் பத்திரிகையில் வெளியானது வாசகர்கள் அறிந்ததே.

பிரித்தானிய குடியேற்ற வாதிகளினால் உருவாக்கப்பட்ட இந்திய தேசக் கட்டமைப்பானது பலவீனமான ஓர் அரசமைப்பாகவே காணப்பட்டது. பிரித்தானியரால் சீரழிவான முறையில் அமைக்கப்பட்ட இந்திய தேசமே, "சுதந்திர இந்தியா" என அழைக்கப்பட்டது. இந்தத் தேசமான இன்றைய நவீன தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியாததாக இருப்பதுடன் நேரு குடும்பத்தின் ஏகபோக வம்ச ஆதிக்கம் மேலும் இந்திய அரசியலைப் பலவீனப்படுத்தியது.

இப்போக்கின்ஒட்டுமொத்த விளைவாக ஒரு கண்மூடித்தனமான யுத்தத்தை தமிழீழ மக்கள் மீது இந்திய அரசு தொடுத்தது. இந்த யுத்தத்தின் மூலம் இந்திய அரசு தனது பலவீனங்களை உணர்ந்து கொண்டது. இதன் பிரகாரம் இந்திய அரசு தன்னைப் புனரமைக்க வேண்டிய தேவையில் உள்ளது. இதன் பொருட்டு பல்வேறு அரசியற் பொருளாதார, இராணுவ மாற்றங்களை இந்திய அரசு செய்ய வேண்டி உள்ளது.

"திருப்பு முனையான ஒரு கால கட்டத்தில் நாங்கள் இப்போது நிற்கின்றோம்" என்ற வி. பி. சிங்கின் வார்த்தையின் அர்த்தம் இதுவேயாகும்.

வி. பி. சிங் அரசாங்கம் பதவிக்கு வந்ததும் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அவையாவன.

பிரசார பாரதி மசோதா கொண்டு வரப்பட்டமை.

இந்திய தேசிய பாதுகாப்புச் சபை உருவாக்கப்பட்டமை.

இந்திய தேசிய ஒருங்கிணைப்புச் சபை உருவாக்கப்பட்டமை.

இட ஒதுக்கீடு சம்பந்தமான மண்டல் கொமிசன் பரிந்துரை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டமை.

வெளியுறவுக் கொள்கையில் புதிய அணுகு முறைகள் மேற்கொள்ளப்பட்டமை.

போன்ற பலவாகும். வானொலி, தொலைக்காட்சி மற்றும் அரச சார்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஆட்சியாளருக்குத் துதிபாடும் சாதனங்களாக இருந்தமையால் சரியான வழிவகைகளைச் சுட்டிக் காட்டி அரசையும், மக்களையும் நெறிப்படுத்த இந்தத்தொடர்புச் சாதனங்களால் முடியவில்லை. இக்குறைபாடானது ஆட்சியாளரின் தன்னிச்சையான போக்குக்கும், திறமையற்ற அரசியல் நிர்வாகத்திற்கும் வழிபடுத்தது என்பது உணரப்பட்டு இக்குறிப்பிட்ட தொடர்புச் சாதனங்களுக்கு சுயாதிக்கம் வழங்கும் நோக்குடன் பிரசாரபாரதிமசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. (இந்த மசோதாவும் குறைந்தளவு சுயாட்சியைத்தான் இந்த நிறுவனங்களுக்குக் கொடுக்கின்றது.)

தமிழீழ மக்களுக்கு எதிரான இந்திய யுத்தத்தில் அரச சார்பு தொடர்புச் சாதனங்கள் அரசுக்குத் துதி பாடிய போது தனியார் பத்திரிகைகள் மக்களுக்கு ஓரளவு உண்மையை உணர்த்தி இந்திய அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்தமை இங்கு கவனிக்கத்தக்கது.

ஒரு சில தனி நபர்களினதும் "றோ"வினதும் கண்மூடித்தனமான தீர்மானம் எடுக்கும் முறையினாற்தான் இலங்கையில் இந்திய அரசு மண் கவ்வ வேண்டி ஏற்பட்டது என்ற உண்மை உணரப்பட்ட நிலையில் இவ்வாறான நிலைமைகளைக் கையாளுவதற்கென ஒரு சபை அவசியம் எனக் கருதி தேசிய பாதுகாப்புச்சபை ஒன்று தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

இதே போலவே பல இன, மத, மொழி பிரதேச வேறுபாடுகளைக் கொண்ட இந்திய அரசில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கும் தேசிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் என தேசிய ஒருங்கிணைப்புச் சபை உருவாக்கப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய விவகாரமும் இவ்வாறான சீர்திருத்தத் தேவையின்பாற்பட்டதே.

மேலும் பெரு வல்லரசுகளுக்கிடையேயான கெடுபிடியுத்தம் முடிவடைந்து புதிய சர்வதேச உறவு நிலை தோன்றியுள்ள சூழலில் அதற்கேற்ப வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றம் செய்யவேண்டிய ஒரு புதிய தேவையும் இந்திய அரசுக்கு எழுந்துள்ளது.

எனவே மொத்தமாகப் பார்க்கும்போது இந்தியா ஒரு திருப்புமுனைக் காலகட்டத்தில் நிற்கின்றது என்பதும் தமிழீழ மக்களுக்கு எதிரான கண்மூடித்தனமான யுத்தத்தின் மூலமான அனுபவமே திருப்பு முனைகளின் தேவையைப் பிரதானமாக உணர்த்தியது என்பதையும் ஐயத்திற்கு இடமின்றிக் கூறலாம்.

பொதுவில் இந்திய அரசு தனது பலவீனங்களை உணர்ந்து கொண்டுள்ளது என்பது சரி. ஆனால் அதே வேளை அந்தப்பலவீனங்களையும் குறைபாடுகளையும் தீர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் திட்டங்களும் வழிமுறைகளும் சரியானவையா அன்றிப் பிழையானவையா என்ற அம்சம் இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## சாரணன்

# அரசியற் சாசனம் நிலைக்குமா என்பதே முக்கிய பிரச்சினை

— வி. பி. சிங்

(டில்லி)

'தேசிய முன்னணி அரசு நிலைக்குமா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. இந்திய அரசியல் சாசனம் பேணப்படுமா என்பதுதான் இன்றுள்ள முக்கிய பிரச்சினையாகும்' என்று இந்தியப் பிரதமர் வி. பி. சிங் அறிவித்துள்ளார்.

இந்தியா எந்த அடித்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளதோ, அந்த அடித்தளங்களான நாட்டின் ஐக்கியம் ஒருமைப்பாடு, அரசியல் சாசனபதிப்பு, நீதித்துறை, மதச்சார்பின்மை ஆகியவை மதித்துப் பேணப்படுமா? என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை என்று குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினையானது அடிப்படைக் கொள்கையுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மை வரவை நிரூபிக்கப் போவதாகவும் வி.பி. சிங் கூறியிருக்கிறார்.

மேலும் ஜனாதிபதி ஆர். வெங்கடராமன் இது தொடர்பாக ஆலோசனை செய்வதற்காக அரசியல் சாசன சட்ட வல்லுநர்களை அழைத்திருக்கிறார்.

அதே வேளை இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஜனாதிபதியைச் சந்தித்த நரசிம்மராவ் தார்மீக ரீதியிலோ அல்லது அரசியல் சாசன உரிமை அடிப்படையிலோ வி. பி. சிங் பதவியில் இருக்கத் தகுதி இல்லாதவர் எனக் கூறினார். இதற்கான உரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆனால் இந்தக் கட்சியின் சார்பாக அறிக்கை வெளியிட்ட வி. என். காரீடியல் அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்பதாக தெரிவித்தார். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தலைவரும் பெரும் அச்சுறுத்தலாக இருந்தனர் என்றும் தெரிவித்தார்.

# புதிய அரசியற் சாசனத்தை அமுலாக்கக் கோரிக்கை

(காட்மண்டு)

நேபாளத்தில் புதிய அரசியல் சாசனத்தை உடனடியாக அமுலாக்குமாறு அரசாங்கத்தை பல்வேறு அரசியல் கட்சிகளும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

நேற்று முன்தினம் தலைநகர் காட்மண்டுவில் நடத்திய பேரணி ஒன்றில் எல்லாக் கட்சிகளும் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளன.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்பாக பல கட்சி ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கு மன்னர் பிரேந்திரா ஒப்புக் கொண்டிருந்தார்.

ஆனால் இது வரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனக்கோரியே கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்து அரசியல் சாசனத்தை அமுல்படுத்தும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றன.

## 33 பிரஜைகள் விடுதலை

(பாக்தாக்)

ஈரானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் பிரஜைகள் முப்பத்தி மூன்று பேரை விடுதலை செய்ய ஈராக்கிய அரசாங்கம் இணங்கியுள்ளது.

பிரிட்டனின் முன்னாள் பிரதமமந்திரி எட்வேட் ஹீத்தின் முன் முயற்சியினாலேயே இவ் விடுதலை இடம்பெற்றுள்ளது.

## நவம்பர் 7ஆம் திகதிக்குள்

# பெரும்பான்மையை நிரூபிக்க

# பிரதமர் வி. பி. சிங்கிற்கு அவகாசம்

(புதுடில்லி)

இந்தியப் பாராளுமன்ற லோக்சபாவில் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும்படி இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், பிரதமர் வி. பி. சிங்கைப் பணித்துள்ளார். நேற்றுக் காலை குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனை அவரது இல்லத்தில் பிரதமர் வி. பி.சிங்சந்தித்தபோதே இந்தப் பணிப்பு விடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

மேலும் ஆளும் ஜனதாதள் கட்சியின் நாடாளுமன்ற விவகாரக் குழு மத்திய அமைச்சர் பி. உபேந்திரா தலைமையில் கூடி நவம்பர் 7ஆம்திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி சிபாரிசு செய்யத் தீர்மானித்துள்ளது. இந்தச்சிபாரிசினை ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர் நவம்பர் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டும்போது வி. பி. சிங் தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கும் படி பணித்துள்ளார்.

இதனிடையில் எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுமார் 100 எம். பிக்கள் நேற்று முன்தினமிரவு குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், பிரதர் வி. பி. சிங்கை பதவி விலகும்படி கேட்டுக்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளனர். இதற்குப் பதிலளிக்கும் விதமாகச் செய்தியாளரிடம் பேசிய வி. பி. சிங் ''பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் நோக்கம் எனக் கில்லை. அப்படியிருந்தால் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானியைக் கைது செய்திருக்க மாட்டேன்'' எனக் கூறியுள்ளார்.

## நேற்றைய பந்தினால் இந்தியாவில் பதட்டம்

(புதுடில்லி)

நேற்று அனுஷ்டிக்கப்பட்ட பந்தினால் இந்தியாவின் பல மாநிலங்களிலும் வன்முறை, பதட்டம் ஏற்பட்டுள்ளது. எனினும் அவசியப் பணிகள் பாதிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கைது செய்யப்பட்டதையடுத்து பாரதீய ஜனதா ஏற்பாடு செய்த பந்த் நேற்று இந்தியா முழுவதிலும் பதட்டத்தை ஏற்படுத்தியது. இமாசலப் பிரதேசம், குஜராத் மாநிலங்களில் பந்த் முழு வெற்றி பெற்றதாகவும், தமிழ்நாடு, மேற்குவங்காளம் மாநிலங்களில் பந்திற்கு ஆதரவு கிடைக்கவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ராஜஸ்தானில் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் பொலிசார் உட்பட ஐவர் கொல்லப்பட்டதாகவும், பொலிசார் கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப்பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது. இதையடுத்து இம் மாநிலத்திற்கு இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசத்தில் தடையை மீறியமைக்காக ஜோதிர்மடம் சங்கராச்சாரியார் உட்பட பலர்கைது செய்யப்பட்டுள்ளனர். குஜராத் மாநிலத்தில் பந்த் முழுவெற்றியளித்துள்ளது. கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் மாநிலங்களில் ஆங்காங்கே சில சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

இவற்றினிடையில் ஒரிசா மாநில சட்டசபை, நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்திட வேண்டுமெனக் கோரும் விஷேட தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

### பலத்தை நிரூபிக்க கால அவகாசம்;

## ஜனாதிபதி வெங்கட்ராமன் மீது பாரதீய ஜனதா குற்றச்சாட்டு

(புதுடில்லி)

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க பிரதமர் வி. பி. சிங் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கால அவகாசம் குறித்து பாரதீய ஜனதாக்கட்சி அதிருப்தி தெரிவித்துள்ளது. இக்கால அவகாசம் ஆட்களை மனம்மாற்றச் செய்து தமது ஆதரவைப் பெருக்கவே வி.பி சிங்கிற்கு பயன்படும் எனக் கண்டனம் தெரிவித்துள்ள பாரதீய ஜனதாக் கட்சிதமது உறுப்பினர்கள் (86 பேரும்) அனைவரும் வி. பி. சிங்கிற்கு எதிராகவே வாக்களிப்பர் என்றும் அறிவித்துள்ளது.

## 40 தபால் பொதிகள் மட்டுமே ''சிகிரியா''வில் வந்தன

(கொழும்புத்துறை)

கடந்த திங்கட்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'சிகிரியா' கப்பலில் யாழ். மாவட்டத்திற்கான நாற்பது தபால் பொதிகள் மட்டுமே கொண்டுவரப்பட்டுள்ளன.

தீவுப்பகுதிகளுக்கான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறைகளுக்காகிய நான்கு பொதிகள் உட்பட மொத்தம் 40 பொதிகள்வந்துள்ளன. 3 பொதிகள் நெடுந்தீவு தபால் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பொதி செஞ்சிலுவைச் சங்கத்திடமும் மிகுதி யாழ். தபால் அலுவலகத்தில் உள்ளன என யாழ். தபாலகத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (24)

## ஓடுகள் இன்மையால் திருத்த வேலைகள் தாமதம்

(யாழ்ப்பாணம்)

குண்டுவீச்சால் சேதமடைந்த யாழ். போதனா வைத்தியசாலையை திருத்தியமைப்பதற்கு போதிய ஓடுகள் கிடைக்காமையால் திருத்த வேலைகள் தாமதமாகும் நிலைக்கு உட்பட்டிருப்பதாக தெரிகிறது.

கடந்த கால சம்பவங்களினால் குண்டு வீச்சுக்களுக்கு இலக்காகிய யாழ். போதனா வைத்தியசாலையின் அத்தனை கட்டடங்களின் கூரையும் சிதைந்து போய் விட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## அரச அதிபர் கூட்டும் கூட்டத்தில் வங்கி முகாமையாளர்களும்

(யாழ்ப்பாணம்)

கிராமசேவகர்களுடனும், உதவி அரசாங்க அதிபர்களுடனும் கூட திட்டமிடப்பட்டிருந்த நாளைய கூட்டத்திற்கு யாழ். அரச அதிபர் வங்கி முகாமையாளர்களையும் திணைக்களத் தலைவர்களையும் சேர்த்துக் கொள்ள இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் நாளை காலை ஒன்பது மணியளவில் யாழ். செயலகத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற இருப்பதால் அனைத்து விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினரும் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

### தென்மராட்சியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரன் ஜுவலர்ஸ், பியூட்டி சலூன், திருக்கணிதம் புத்தகசாலை ஆகியவை உட்பட மேலும் சலவைத் தொழிற்சாலைகள், நகைக்கடைகள், முடி திருத்தும் கடைகள் அனைத்தும் சேதமடைந்தன.

சந்தைப் பகுதிக்குள் ஒரு குண்டு விழுந்ததில் அரிசிக் கடைக் கட்டடம் முற்றாகச் சேதமாகியது. இதற்குள் நின்ற ஒருவர் தலைசிதறிய நிலையில் ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியானார், இவருடைய மண்டைஓட்டின் ஒருபகுதி வாழைப்பழக் கடைக்குள் பறந்து விழுந்து கிடந்தது. அரிசிக்கடையைச் சூழவிருந்த ஏராளமான பெட்டிக்கடைப் பகுதிகள் சேதமடைந்து போயின. வெற்றிலைக்கடைக்கட்டடமும் சேதமாகியது.

குண்டுவீச்சு இடம்பெற்ற சமயம் சந்தைக்குள் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழிகள் இடிந்துபோயின. இதனால் எவரும் காயமடையவில்லை. சந்தையின் நடுவே நாலாபுறமும் தகரங்களும் சிதைந்து போன தளபாடங்களும் விற்பனைசெய்யக் கொண்டு வந்திருந்த அரிசி உட்பட ஏராளமான பொருள்கள் சிதறிக் கிடந்தன.

இத்தாக்குதல் முடிந்ததும் ஒருமணிநேரத்தின் பின் மீண்டும் அதேகுண்டுவீச்சு விமானங்கள் மூன்றும் வந்து தாக்கின. இத்தாக்குதலில் குணம் சயிக்கிள் வேக்ஸ் உட்பட தனங்கிளப்பு வீதியில் உள்ள ஐந்து கடைகள் சேதமுற்றன.

இதேநேரம் மட்டுவில் பகுதியிலும் புத்தூர் சந்திப் பகுதியிலும் நேற்றுப் பரவலான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் பல வீடுகள் சேதமுற்றன. பல அப்பாவிப் பொதுமக்கள் காயமுற்றனர். (லோ)

## யாழ். செயலகம் முன்பாக அடையாள உண்ணாவிரதம்

(கொழும்புத்துறை)

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்லககளால் பாதிககப்பட்டவர்கள் சார்பாக தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் யாழ். செயலகம் முன்பாக ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மிகவிரைவில் நடாத்தவுள்ளது என மன்ற அமைப்பாளர் திரு. சி. கஜேந்திரநாத் தெரிவித்துள்ளார்.

இம்மன்றம் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய யாழ்.கிளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பருத்தித்துறை (மந்திகை) அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றின் முன்பாக ஒரு நாள் உண்ணாவிதரம் அனுஷ்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

## சங்கானை ஆஸ்பத்திரியில் வீடு செல்லக் காத்திருப்போர்

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் மனநோய் குணமடைந்து, வீடு செல்வதற்கு ஆவலுடன் தமது உறவினர்களை எதிர்பார்த்து 5 பேர் காத்திருக்கின்றனர்.

டாக்டர்களும் அவர்களது உறவினர் வந்து கூட்டிச்செல்லலாமென அனுமதித்தனர் அவர்கள் விபரமும், அவர்கள் அழைக்க வருவதென எதிர்பார்க்கும் உறவினர்கள் விபரங்களும் கீழே;

திருமதி சிவபாக்கியம் (வயது 35) உறவினர் - எஸ். சிவகுரு விடத்தல்பளை, மிருசுவில், பூபாலசிங்கம் குசலகுமாரி (வயது 26) உறவினர்- வி. சிவானந்தம், 6 ஆம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை.

லிங்கையா நாகேஸ்வரி (வயது 38) உறவினர்-பி. மகாலிங்கம், அம்மன் கோயிலடி, புளியன்குளம், சி. பரமநாதன் (வயது 30) உறவினர்-ச. கனகலிங்கம், சங்கத்தானை, சாவகச்சேரி, எம். புவனேஸ்வரி (வயது 48) உறவினர்- எம். திருச்செல்வம் (மகன்) தேவிபுரம், பரந்தன் றோட், கிளிநொச்சி.

சங்கானை வைத்தியசாலையில் நோயாளர் தொகைமும் மடங்காகி விட்டதால் குணமடைந்த நோயாளரை உடன் வந்து அழைத்துச் செல்லுமாறு வைத்தியசாலை அதிகாரிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (12)

### ஊரடங்கு இல்லாத

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக இருந்த 5 மில்லியன் ரூபா இதுவரை வந்து சேரவில்லை எனவும் அப்பணம் வந்தடைந்ததும் பணக்கொடுப்பனவு செய்யமுடியும் என்றும் எவ்வித தரகுப்பணமும் இன்றி எவ்வளவு தொகைபணத்தையும் வைப்பில் இட்டு உண்டியல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்த பிரதான முகாமையாளர் வங்கியில் பணச்சுற்றோட்டத்தை ஏற்படுத்தவே இவ்விசேட சலுகை எனவும் மேலும் தெரிவித்தார். (மு)

### 6 படைபலி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இராணுவ அதிகாரி அம்பாறை மாவட்டபகுதில் இடம் பெற்ற மோதலொன்றில் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது.

### பலவீடுகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தியில் உள்ள அரிசி ஆலை ஒன்றின்மீது தாக்குதல் நடாத்தியதில் அரிசி ஆலையும், அருகில் உள்ள வீடு ஒன்றும் முற்றாகச் சேதமடைந்ததுடன் அப்பகுதியில் இருந்த நான்கு கடைகளும் சேதமடைந்தன. இத்தாக்குதலில் பத்மநாதன் (வயது 30), நாகேஸ்வரன் (வயது 36) ஆகியோர் காயமடைந்தனர்.

கல்வளைப்பிள்ளயார் கோயிலடியில் நடத்தப்பட்ட தாக்குதலில் கோயிலின் வடக்கு வீதியில் உள்ள திருமதி விஸ்வநாதக் குருக்களின் வீடும் அருகில் உள்ள மற்றும் இரண்டு வீடுகளும் பலத்த சேதமடைந்ததுடன் செ. ஜெயபவான் (வயது 19) என்பவரும் பலத்த காயமந்துள்ளார். இத்தாக்குதலில் இப்பகுதியில் உள்ள பதினைந்திற்கும் அதிகமான தென்னை மரங்களும் சேதமடைந்தன. கோயில் வீதியில் நின்ற மாடு ஒன்று துடிதுடித்து உயிருடன் போராடிய சமயம் மிருகவைத்தியர்கள் விரைந்து சென்று சிகிச்சை அளித்தும் அதன் உயிரை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. (க)

### ஐரோப்பிய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய பொருளாதார சமூகம் தெரிவித்துள்ள மேற்படி கருத்து இலங்கையின் நிலையை பெரிதும் பாதிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### மாவிட்டபுரத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து முன்னேற முடியாத இராணுவத்தினர் முகாமிற்குள் முடங்கிக் கொண்டனர். இதில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை. புலிகள் தரப்பில் இருவர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து பலாலிப் பகுதியிலிருந்து அரசடிச் சந்தி, தச்சன் காட்டுச் சந்தி, கொல்லன் கலட்டிப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஆட்லறி ஷெல் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை சிறிலங்கா இராணுவத்தினர் மாவிட்டபுரம் பகுதியில் பத்திற்கும் மேற்பட்ட வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்த்திருப்பதாகத் தெரியவருகிறது இப்பகுதியில் உள்ள அலுமினியத் தொழிற்சாலையையும் இராணுவத்தினர் முற்றாகச் சேதப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. (ச)

### சாவகச்சேரியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளமுடியவில்லை, இருந்தும் இவர் யாழ்ப்பாணம் பொம்மைவெளி நாவாந்துறை பகுதியைச் சேர்ந்தவர் என அப்பகுதியில் காயமடைந்த சிலர் கூறினர்.

மேலும் காயமடைந்த பொதுமக்களின் பெயர் விபரம் வருமாறு. தி. திலீப்குமார் (வயது11) வி. விஜயகுமார் (வயது 30) கே, கதிர்காமம் (வயது57) நி. சந்திரன் (வயது24) சி. தேவராஜ் (வயது 26) ஐ. சிவலோகநாதன் (வயது 21) கே. கனகசபாபதி (வயது28) நி. நடேஸ்வரன் (வயது 23) ஏ. ராசு (வயது 25), எம். திலகராஜ் (வயது 24) எ. சின்னம்மா (வயது 58) சிவ சத்தியராஸ் (வயது 17) சத்தியதேவன் (வயது 28) வல்லிபுரம் (வயது 28) திரவியச்செல்வம் (வயது 30) செ. சிவராசா (வயது30) எம். பூபாலசிங்கம் (வயது42) எஸ். செல்வரட்ணம்(வயது27) ஆகியோராவர். (லோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.